வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 02.07.2025 புதன்கிழமை இதழ் : 183 பக்கங்கள் : 12




# அரியாலை மனித புதைகுழி அகழ்வு தேவையற்ற விடயம்

## சொல்கிறார் விமல் வீரவன்ஸ

- இலங்கை இனங்களிடையே வெறுப்பை ஏற்படுத்தும் முயற்சி



கொழும்பு, ஜூலை 02

**“உயிரிழந்த மக்களின் எலும்புக்கூடுகளை தேடி - கடந்த காலத்தைத் தோண்டும் நடவடிக்கை தற்போது தேவையற்ற விடயமாகும்”, இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**


நேற்று கொழும்பில் அவர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். இதன்போது,

அரியாலை - சித்துப்பாத்தி மயான (செம்மணி) மனிதப் புதைகுழி தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அத்துடன், “குறித்த அகழ்வு பணிகள் நிறைவடையும் வரையில், இந்த விடயத்தில் இறுதி முடிவுக்கு வர முடியாது. தொடர்ந்தும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் போது சில சந்தர்ப்பங்களில் இராணுவத்தினரின் ஆடை அல்லது அதிலிருந்த இலக்க தகடு ஏதாவது மீட்கப்படலாம்.

“இதன்போது, விசாரணைகள் வேறு பக்கம் திரும்பும். இந்த நிலை யில், இன்னும் 15 நாட்களுக்கு அங்கு கண்காணிப்பு,

11




அரியாலை மனித புதைகுழி:

## பொம்மையும் சிறுவருக்கான காலணியும் மீட்கப்பட்டன!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூலை 02

அரியாலை - சித்துப்பாத்தி (செம்மணி அருகே) மனிதப் புதைகுழி அகழ்வில் நேற்றைய தினம் பொம்மை ஒன்றும் சிறுவருக்கான காலணி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன், மேலும் சில எலும்புக்கூடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன.



அரியாலை மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்டமாக ஆறாவது நாளாகவும் நேற்றைய தினம் அகழ்வுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

11

## கிணறருகே படுத்தவர் சடலமாக மீட்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்., ஜூலை 02

மது போதையில் கிணற்றின் அருகே படுத்தவர் மறுநாள் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மானிப்பாய் தெற்கில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் பிள்ளைகள் இருவரின் தந் தையே சடலமாக

11

காணி உரித்து குறித்த வர்த்தமானி:

## வழக்கால் கைவிடப்பட்டிருந்தாலும் அரச ஊழியர் மூலம் திட்டம் தொடரும்!

### காணி பிரதி அமைச்சர் தெரிவிப்பு

- வவுனியாவில் 24 ஆயிரம் ஏக்கர் பொதுமக்களுக்கு வழங்கப்படும்

- குமார. கோகுலன் -

வவுனியா, ஜூலை 02

காணி உரித்து தொடர்பான வர்த்தமானி சுமந்திரனின் வழக்கால் கைவிடப்பட்டிருந்தாலும் அரச ஊழியர்கள் மூலமாக காணி உரித்து தொடர்பான பிரச்னைகளை முடிவுக்குக் கொண்டு வருவோம். பொதுமக்கள் மத்தியில் இது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம் - என்று விவசாயம், காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் வவுனியாவில் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்த பின்னர்

11

## அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தீங்கையே விளைவிக்கின்றது

எதிர்க்கட்சி தலைவர் சாடல்

கொழும்பு, ஜூலை 02

பலவீனமான, வினைதிறனற்ற, பொய் சொல்லும், ஏமாற்றும் தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்களுக்கு பெரும் தீங்கு விளைவித்து வருகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன், எரிபொருள் மீதான வரிகளை நீக்குவோம். துறைமுகத்தில் இறக்கப்படும்

11

## வோல்கரின் இலங்கை பயணத்தில் சில உள்நோக்கங்கள் இருக்கலாம்!

### பொதுஜன பெரமுன சந்தேகம்

கொழும்பு, ஜூலை 02

“ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் இலங்கை பயணத்தின் பின்னணியில் சில உள்நோக்கங்கள் இருக்கலாம்”, இவ்வாறு சந்தேகம் வெளியிட்டுள்ளார் முன்னாள் அமைச்சரான சரத் வீரசேகர.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான அவர் தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே

11

## ஓமந்தையில் ஆக்கிரமித்த காணியில் விகாரை அமைக்க பொலிஸார் முயற்சி?

- குமார. கோகுலன் -

வவுனியா, ஜூலை 02

ஓமந்தை பொலிஸ் நிலையமருகே உள்ள காணியை ஆக்கிரமித்து அதில், விகாரை அமைக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் இந்த விடயம் தொடர்பில் அந்த காணியின் பராமரிப்பாளரை அவர்கள் அச்சுறுத்தி வருகின்றனர் எனவும் குற்றஞ்சாட்டப்பட் டுள்ளது.

ஏ-9 வீதியிலுள்ள ஓமந்தை பொலிஸ் நிலையம் அருகேயுள்ள சுமார் 8 பரப்பு காணியையே பொலிஸார் இவ்வாறு கையகப்படுத்த முயல்கின்றனர்

11

யாழ்ப்பாணத்திலிருந்து சென்று

## வவுனியாவில் இளைஞனை கடத்தி தாக்கிய மூவர் கைது

- குமார. கோகுலன் -

வவுனியா, ஜூலை 02

யாழ்ப்பாணத்திலிருந்து வந்து இளைஞர் ஒருவரை தாக்கியதுடன், அவரிடமிருந்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தையும் பறித்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவரை தாம் கைது செய்துள்ளனர் என்று வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

11

## 4ஆம் கட்ட கடனுக்கு ஐ.எம்.எவ். அங்கீகாரம்

வாஷிங்டன், ஜூலை 02

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் நான்காவது மதிப்பாய்வை சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்) நிர்வாகக் குழு அங்கீகரித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு நேற்று கூடியபோதே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன் மூலம் இலங்கைக்கு 34.4 கோடி

11

## பேருந்து கட்டணங்கள் 0.5 சதவீதம் குறையும்!

கொழும்பு, ஜூலை 02

பேருந்து கட்டணங்கள் 0.55 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன. இந்த கட்டண குறைப்பு எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த கட்டணத் திருத்தத்துக்கு அமைய ஆரம்ப பேருந்து கட்டணத்தில் (27 ரூபாய்) திருத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் யாழ். மாநகரில் நாளை ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு எல்லைக்குள் நாளை வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை விசேட நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

டெங்கு பரவல் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. எனவே, மாநகர எல்லைக்கு உட்பட்டவர்கள் தங்கள் வாழிடங்கள், சமய, அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தை மயானங்களின் சுற்றுச்சூழலை துப்புரவாக பேணுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும், நுளம்பு பெருக்கத்துக்கு சாதகமான சூழலை வைத்திருப்போருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாளை வியாழக்கிழமை நாவாந்துறை பொதுச் சுகாதார பரிசோதகருக்கு உட்பட்ட பகுதிகளிலும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை குருநகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பகுதிகளிலும் மறுநாள் சனிக்கிழமை கொழும்புத்துறை பொதுச் சுகாதார பரிசோதகர் பகுதிகளிலும் சோதனை களத் தரிசிப்பு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 35 ஆண்டுகளின் பின்னர் அதிக மின்சார உற்பத்தி!

யாழ்ப்பாணம், ஜூலை 02

கடந்த ஜூன் மாதத்தில் 70 சதவீத மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 35 ஆண்டுகளுக்கு பின்னர் அதிகளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்ட சம்பவம் இதுவாகும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த மின்சாரம் புதுப்பிக்கத்தக்க வளங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஏனைய மாதங்களுடன் ஒப்பிடுகையில் ஜூன் மாதத்தில் மின்சார பயன்பாடு அதிகமாகக் காணப்பட்ட என்றும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

மேலும், நாட்டில் 100 சதவீதம் நீர் மின்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு எரிசக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியிலிருந்து அதிகளவான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டமை இலங்கை மின்சார சபையின் முயற்சிகளை பிரதிபலிக்கிறது என்றும் கூறப்பட்டது. (ஐ)



# இந்திய துணைத் தூதுவருடன் ரெலோ கட்சியினர் சந்திப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 02

யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளியை பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தலைமையிலான ரெலோ கட்சியினர் நேற்று சந்தித்துப் பேசினர்.

இந்த சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நடைபெற்றது.

இதன்போது பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்தல், பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல், காங்கேசன்துறையில் கப்பல் கட்டுவதற்கு சிறிய நிலையம் ஒன்றை அமைத்தல், மன்னாரில் நவீன முறையில் விளையாட்டு மைதானம் அமைத்தல், மாந்தை மேற்கில் உள்ள விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்தல், மன்னார் பிரதேச சபை பிரிவில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த தேவையான உதவிகள் போன்றவற்றை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தாங்கள் முன்வைத்த கோரிக்கைகளை இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி ஏற்றுள்ளார் என்று மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், மாந்தை மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஞானப் பிரகாசம் பிறேம்குமார், வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், மன்னார் நகர சபை உறுப்பினர் செபமாலை ஆரோக்கியநாதன் பிகிறாடோ, மன்னார் பிரதேச சபை உறுப்பினர் றொயிட்டன் சாந்தினி குரூஸ் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். (ஐ)

# உடைக்கப்பட்ட தந்தை செல்வாவின் சிலை மீளமைக்கப்பட்டு திறந்துவைப்பு

மன்னார், ஜூலை 02

மன்னார் நகரில் அமைந்திருந்த தந்தை செல்வநாயகத்தின் உடைக்கப்பட்ட சிலை மீண்டும் நிறுவப்பட்டு நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், மதத் தலைவர்கள், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் கிளை தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சார்ள்ஸ் நிர்மலநாதன், கட்சியின் உறுப்பினர்கள், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், நகர சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

அஞ்சலியை தொடர்ந்து மத தலைவர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்



பிரகாசம் அன்ரனி டேவிட் சன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மன்னார் நகர மத்தியில் மாவட்டச் செயலகத்துக்கு முன் அமைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் சிலை கடந்த புதன்கிழமை அதிகாலை இனந்தெரியாத நபர்களால் உடைக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பில் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# தமிழ் அரசு கட்சியின் மன்னார் மாவட்ட பொருளாளர் விலகல்!

மன்னார், ஜூலை 02

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மன்னார் மாவட்ட தலைமையின் கீழ் செயல்பட முடியாது என்று குறிப்பிட்டு அந்தக் கட்சியின் மன்னார் மாட்டவ பொருளாளர் தி. பரஞ்சோதி கட்சி பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இது தொடர்பில் கட்சியின் பதில் பொதுச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

அதில், "கட்சியின் மாவட்ட தலைமை கடந்த தேர்தலில் தன்னிச்சையாக செயல்பட்டது டன், உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் அலட்சியமாக செயல்பட்டமை கட்சிக்கும் மன்னார் மாவட்டத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தற்போதைய மாவட்ட தலைமையுடன் தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, மக்கள் மத்தியில் பல்வேறு வகையான விமர்சனங்கள் மற்றும் எதிர்ப்புகள் எழுந்துள்ளதால், தோல்வி மற்றும் பின்னடைவுக்கு தார்மீக பொறுப்பேற்று பொருளாளர் பதவியில் இருந்து விலகுகிறேன்", என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் தலைவராக செயல்படும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கட்சிகளின் தலைமை பதவியில் இருந்து விலகுகிறார் என்று பதில் பொதுச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என்று தகவல் வெளியானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பருத்தித்துறை மருத்துவமனையில் நிதிப்பிரிவு திறந்து வைக்கப்பட்டது

வடமராட்சி, ஜூலை 02

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கென தனியான நிதிப் பிரிவு நேற்று செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் வை. திவாகர் தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இதில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் தனுஜா முருகேசன் கலந்து கொண்டார்.

மேலும், இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம நிதிப்பிரிவு பிரதி செயலாளர் எஸ். குகதாஸ், வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி பி. ஜெயராணி, வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வி. பி. எஸ். டி. பத்திரண உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ஐ)

# மீண்டும் சிறை சென்றால் மீளவும் புத்தகம் எழுதுவேன்

## சொல்கிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஜூலை 02

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்வதற்காக தனக்கு அழைப்பாணை விடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

"நான் வீடமைப்பு விவகார அமைச்சராகயிருந்தபோது விற்பனை செய்யப்பட்ட சில நகைகள் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக என்னை அழைத்துள்ளனர். அவர்கள் ஒரு திகதியை குறிப்பிட்டு அன்றைய தினம் வாக்குமூலத்தை பதிவு செய்வதற்காக வருமாறு கேட்டுள்ளனர். அன்றைய தினம் எனக்கு வேறு ஒரு வழக்கு உள்ளதால் சமுகமளிக்க முடியாது என தெரிவித்து நான் கடிதம் எழுதியுள்ளேன்.

"முன்னர் போல அவர்கள் என்னை சிறையில் அடைத்தால் கிடைக்கும் நேரத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவேன்.



கடந்த தடவை அவர்கள் என்னை சிறையில் அடைத்த வேளை இரண்டு நூல்களை எழுதி ஐந்து ஓவியங்களை வரைந்தேன், இம்முறை சிறையில் அடைத்தால் அவ்வாறு நூல்களை எழுதுவேன்", என்றார். (ஐ)

# விலங்குகளை வேட்டையாடினால் 1992ஐ அழைக்கவும்

கொழும்பு, ஜூலை 02

சட்டவிரோதமாக வன விலங்குகளை வேட்டையாடுபவர்கள் தொடர்பில் 1992 என்ற அவசர தொலைபேசி இலக்கம் மூலம் முறைப்பாடளிக்குமாறு வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அவசர தொலைபேசி இலக்கமானது 24 மணிநேரமும் சேவையில் இருக்கும் என்றும் வன விலங்குகளை வேட்டையாடப்படுவதை கட்டுப்படுத்துவதற்காக இந்த அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.07.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# மாகாண சபை தேர்தல் நடக்குமா?

தமிழீழத்தை வெற்றிகொண்டது போன்ற கொண்டாட்ட மனோபாவத்துடன் உள்ளூராட்சி சபைகளின் அமர்வுகளில் மாலைகளும் பொன்னாடைகளும் காட்சியளிக்கின்றன. ஆனால், ஆட்சியமைத்த சபைகளை கொண்டு ஏதாவது உருப்படியாக செய்வார்களா என்பதையும் பொறுத்திருந்துதான் நோக்க வேண்டும். சபைகளின் தலைவர்களை தெரிவு செய்வதில் தகுதி ஆளுமை என்பதெல்லாம் ஒரு விடயமாகவே நோக்கப்படவில்லை. மாறாக, தங்களுக்கு தேவையானவர்களா - அடுத்து வரவுள்ள தேர்தலில் தங்களுக்கு பயன்படுவார்களா என்பது மட்டுமே நோக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து எந்தத் தேர்தல் நடக்கும்? மாகாண சபை தேர்தல் என்பதுதான் பதிலாக இருக்க வேண்டும். ஆனால், அது நடக்குமா என்பதே ஒரு பெரிய கேள்வியாகியிருக்கிறது. இராஜதந்திர தரப்புகளே தேர்தல் நடக்குமா என்று கேட்குமளவுக்கு நிலைமைகள் காணப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தி ஜனநாயகம் மற்றும் புதிய அரசியல் ஒழுக்கம் பற்றியெல்லாம் பேசும் ஒரு கட்சி. அப்படியானதொரு கட்சி எவ்வாறான காரணங்களைக் கூறி தேர்தலை நடத்தாமல் விடலாம்? புதிய அரசியல் யாப்புக் கதையைக் கூறி தேர்தலை பிற்போடலாம். ஒருவேளை அதிசயமாக புதிய அரசியல் யாப்பு வந்துவிட்டால் அதன் பின்னர் மாகாண சபை தேர்தலே இருக்காதும் போகலாம். ஏனெனில், மாகாண சபை இருந்தால்தானே தேர்தல் நடத்த வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் விடுவதற்கான காரணம் என்ன? உள்ளூராட்சித் தேர்தலில் பின்னடைவை சந்தித்திருப்பதால் மாகாண சபைத் தேர்தலில் திருப்தியான வெற்றியைப் பெற முடியாது என்பது ஒரு காரணமாக நோக்கப்படலாம். அப்படி நோக்கினால் அது தவறான பார்வையும் அல்ல. ஆனால், விடயங்களை மேலோட்டமாகப் பார்த்தால் அதுதான் காரணம் போலும் தெரியும். ஆனால், விடயத்தை ஆழமாக நோக்கினால் மாகாண சபை முறைமை தொடர்பில் பழைய ஜே. வி. பியின் பார்வை செலுத்தப்படுகிறதா என்னும் சந்தேகத்தை சாதாரணமாக பின்தள்ளிவிட முடியாது.

அநுர குமார திஸநாயக்க, ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசியிருக்கிறார். ஏற்கனவே, நல்லாட்சி அரசாங்கம் என்று அழைக்கப்பட்ட ரணில் - மைத்திரி காலத்தில் முன்னெடுக்கப்பட்ட விடயங்களை தொடர்வதான ஒரு கதை சொல்லப்பட்டிருக்கிறது. அது ஒரு தந்திரமான நகர்வாகவும் இருக்கலாம். ஏனெனில், ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணக்கத்துடன் - அவர்களும் இணைந்து முன்னெடுத்த விடயம்தான் அந்த யாப்பு கதை. அதைத் தொடரப் போவதாகக் கூறுகின்றபோது அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு தமிழ் அரசு கட்சியும் இணக்கம் தெரவிக்கலாம். இதனை ஒரு வாய்ப்பாகக் கொண்டு மாகாண சபைத் தேர்தலை இலகுவாகப் பிற்போடலாம்.

இவை அனைத்துக்கும் பின்னால் இருப்பது ஒரேயொரு விடயம்தான். அதாவது, மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கான காரணங்களை கண்டுபிடிப்பது. மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் மட்டும்தான் தேர்தல் நடக்கும். ஆனால், அவ்வாறான அழுத்தங்கள் வெளியிலிருந்து வரப் போவதில்லை என்பதும் அரசாங்கத்துக்குத் தெரியும். அவ்வாறாயின், அந்த அழுத்தத்தை எவ்வாறு ஏற்படுத்துவது? மாகாண சபைத் தேர்தலின் போது யாரை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்துவது என்பது தொடர்பில் கதைகளுண்டு. ஆனால், முதலில் தேர்தல் நடக்க வேண்டுமல்லா...!

மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் - அது தமிழ் மக்களின் ஜனநாய உரிமை என்னும் அடிப்படையில் வடக்கு, கிழக்கிலிருந்து மக்கள் குரல் கொடுத்தால் - அதனடிப்படையில் அதனை ஓர் அரசியல் இயக்கமாக முன்னெடுத்தால் மட்டுமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சிந்திக்கும். இல்லாவிட்டால், புதிய காரணங்களைக் கண்டுபிடித்து தேர்தலை அவர்கள் நிச்சயம் பிற்போடுவார்கள்.

# கொள்கலன்கள் விடுவிப்பு விடயத்தில் தொடர்புபட்டவர்கள் மீது நடவடிக்கை!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

*கொழும்பு, ஜூலை 02*

துறைமுகத்திலிருந்து கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமையை அரசியல் மயப்படுத்திய எதிர்க்கட்சிகள் தற்போது பொய்யாகியுள்ளன. இதனுடன், தொடர்புடைய சுங்க அதிகாரிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பேருந்து கட்டண திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும். ஜூலை முதலாம் திகதியிலிருந்து அதனை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் எரிபொருள் விலை அதிகரிப்பால் அது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. புதிய எரிபொருள் விலைக்கமைய சூத்திரத்துக்கமைய புதிய பேருந்து கட்டணங்கள் தீர்மானிக்கப்படும்.

துறைமுகத்திலிருந்து கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமையை அரசியல் மயப்படுத்திய எதிர்க்கட்சிகள் தற்போது பொய்யாகியுள்ளன. முன்னர் அவற்றை மேல் மாகாண ஆளுநருடையவை எனக் கூறியவர்கள் தற்போது அது குறித்து எதுவும் பேசுவதில்லை. 5 மாதங்கள் கடந்த பின்னர் நான் அதற்கு அனுமதி வழங்கினேன் என்று என்மீது குற்றஞ்சுமத்தினர்.

எதிர்க்கட்சிகள் மிகவும் கீழ்தரமான அரசியலிலேயே ஈடுபடுகின்றன. எவ்வாறிருப்பினும் கொள்கலன் விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவால் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய சுங்க அதிகாரிகளாலேயே இந்த விடயத்தில் தவறிழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கைக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றார்.

# விழிப்புணர்வு செயலமர்வு!

*யாழ்ப்பாணம், ஜூலை 02*

சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பணிமனை விழிப்புணர்வு செயலமர்வு ஒன்றை நடத்துகிறது.

இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, கிளிநொச்சி பொலிஸ் பிரிவுகளில் பணியாற்றும் பொலிஸாருக்கே இந்த செயலமர்வு நடைபெறவுள்ளது. இந்த செயலமர்வு யாழ். பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழிப்புணர்வு செயலமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதான வளவளராகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார்

# ஷானி அபேசேகரவின் நியமனமும் அரசியலே

## ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறது

*கொழும்பு, ஜூலை 02*

ஷானி அபேசேகர குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டமை முற்றுமுழுதாக அரசாங்கம் அதன் தேவைக்காக முன்னெடுத்துள்ள ஒரு நடவடிக்கையாகும். அவர் நியமிக்கப்பட்டுள்ள முறைமை அவர் எடுக்கும் ஏதேனுமொரு நடவடிக்கை மீது சந்தேகத்தையே ஏற்படுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு விவகாரம் ஒருபுறமிருக்க சர்வதேச மோதல் நிலைமைகள் தொடர்பிலும் இந்த அரசாங்கம் அக்கரையின்றி செயல்பட்டு வருகிறது. அவற்றால் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்வதற்கும் எந்தவொரு தெளிவான கொள்கையும் அரசாங்கத்திடம் இல்லை. அரசியல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருக்காமல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

ஷானி அபேசேகர என்பவர் குறிப்பிட்ட காலத்தில் மிகவும் சிறப்பாக சேவையாற்றிய அதிகாரி ஆவார். எனவே, அவரது பணிகள் தொடர்பில் எமக்கு எவ்வித பிரச்னையும் இல்லை. ஆனால், அவரின் நியமனத்தை அரசியல் நியமனமாக இந்த அரசாங்கம் மாற்றியுள்ளது. முதலாவது காரணி அவர் ஓய்வுபெற்ற அதிகாரி ஆவார். அது மாத்திரமின்றி தேர்தல் காலத்தில் அவர் தேசிய மக்கள் சக்தியின் பிரசார மேடைகளில் ஏறியிருக்கிறார்.

எனவே, அவரால் எடுக்கப்படும் ஏதேனுமொரு நடவடிக்கை பொது மக்களால் சந்தேகத்துடனேயே பார்க்கப்படும். குறித்த நபர்மீதான நம்பிக்கையின்மை என்பதற்கு அப்பால், அவர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்ட முறைமையே கேள்விக்குரியதாகக் காணப்படுகிறது. எனவே, இதுபோன்ற விடயங்களில் அரசாங்கம் இன்னும் ஆழமாக சிந்தித்து செயல்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் - என்றார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 02 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 18
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சப்தமி




**மேடம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**இடபம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை கற்றுக் கொள்வீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மிதுனம்**
சொத்து பிரச்னையில் நல்ல தீர்வு கிடைக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். தவியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். சிலர் உங்களை குறை கூறினாலும் அதை பெரிதாக்க வேண்டாம். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**கன்னி**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வந்து நீங்கும். மேலதிகாரி உடன் மோதல்கள் வேண்டாமே. முன்னேறும் நாள்.

**துலாம்**
எதிர்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். புதுபொறுப்புகளை ஏற்பீர்கள். புகழ் உயரும்.

**விருச்சிகம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு பெருகும்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் குறையும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். நாவடக்கம் தேவைப்படும்.

**கும்பம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும்.

**மீனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். அமோகமான நாள்.

# பொருளாதார மத்திய நிலையத்தை இயங்க வைக்க துரித நடவடிக்கை



வவுனியா, ஜூலை 02

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தை இயக்கச் செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் மற்றும் கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த விசேட கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத் சந்திர, வவுனியா மாநகர சபை முதல்வர் சு. காண்டீபன், வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ. ரதீஸ்வரன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

2018ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு இன்னமும் திறக்கப்படாதுள்ள வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பது தொடர்பில் இதில் பிரதானமாக ஆராயப்பட்டது. வவுனியா நகரில் மொத்த மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் 37 வியாபாரிகளை முதல் கட்டமாக பொருளாதார மத்திய நிலையத்தினுள் வியாபாரத்துக்கு அனுமதிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது. (எ-10)

# காணிகளை கையகப்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

வவுனியா, ஜூலை 02

வவுனியாவில் சட்டவிரோதமாக குளங்களை ஆக்கிரமித்து காணிகளை கையகப்படுத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, வவுனியா நகரில் உள்ள சட்டவிரோத கடைத் தொகுதிகள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (எ-10)

# மேலதிக அரசாங்க அதிபராக சிவகரன் நேற்று கடமையேற்பு



யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக கே. சிவகரன் நேற்றுக்காலை அரசாங்க அதிபர் ம. பிரதீபன் முன்னிலையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில், பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்டச் செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர் உள்ளடங்கலான பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மேலதிக அரசாங்க அதிபராக கடமையேற்ற சிவகரன், முன்னர் வேலணை பிரதேச செயலாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# "வளத்தின் வழிகாட்டியாக வேலணை உருவாகும்"

யாழ்ப்பாணம், ஜூலை 02

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் வினைத்திறன் மிக்க, வளமான சபையாக வேலணை பிரதேச சபையை மாற்றியமைக்க அமைந்துள்ள ஆட்சி அதிகார காலத்தை பயன்படுத்திக் கொள்ள அனைத்து உறுப்பினர்களும் கட்சி பேதங்கள், பிரிவினைகள் இன்றி உழைக்க வேண்டும் என்று வேலணை பிரதேச சபையின் தவிசாளர் அசோக்குமார் வலியுறுத்தியுள்ளார்.

வேலணை பிரதேச சபையின் புதிய ஆட்சிக்காலத்தின் கன்னி அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வேலணை பிரதேச சபையானது மிகப் பின்தங்கிய ஒரு சபையாக உள்ளது. இந்த நிலை இனியும் தொடரக் கூடாது என்பதே எம் அனைவரின் நிலைப்பாடாக உள்ளது.

இதனடிப்படையில் எமது சபையை வருமானம் கூடிய சபையாக - வினைத்திறன் மிக்கதாக பரிணமிக்கச் செய்வது அவசியமாகும்.

கடந்த காலத்தில் முன்னெடுக்காது இருந்த திட்டங்களை நாம் கட்சி பேதங்கள் இன்றி முன்னெடுப்பது அவசியம்- என்றார்.




வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளராக பதவியுயர்வு பெற்றுச்செல்லும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனனுக்கான சேவைநலன் பாராட்டு விழா, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம் மீளவும் தலைதூக்க ஒருபோதுமே அனுமதி இல்லை!

## ஜனாதிபதி திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 02

இனவாதம் மீண்டும் தலைதூக்க ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திட்டவட்டமாக அறிவித்தார்.

இலங்கை ராமான்ய மகா பீடத்தின் 74 ஆவது உபசம்பதா மஹோத்சவத்தின் தொடக்க விழாவில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

சில அரசியல் குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தியதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதன் ஊடாக அரசியல்வாதிகளன்றி வடக்கிலும் தெற்கிலும் உள்ள அப்பாவி பெற்றோர்களின் பிள்ளைகளே பலியானதாகவும் தெரிவித்தார்.

இனவாதத்தை நிராகரித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப பாடுபடவேண்டும் என்றும், அனைவருக்கும் ஜனநாயக ரீதியாகவும் சுதந்திரமாகவும் செயல்படும் திறன் இருந்தாலும், இனவாதம் மீண்டும் ஒருபோதும் தலைதூக்க அனுமதிக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எனவே, இனவாதத்தை நிராகரித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால், சட்டங்கள் பலப்படுத்தப்பட்டு இனவாதம் தோற்கடிக்கப்படும் என்றும், சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக வாழும் ஒரு சமூகத்தை உருவாக்குவதே தனது அரசாங்கத்தின் நோக்கம் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (அ)

# மொழி உரிமையை பாதுகாக்க முறைப்பாடுகளை வழங்குங்கள்!

## அரச கருமமொழி ஆணைக்குழுவின் தலைவர் மக்களிடம் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 02

**கடந்த காலங்களில் மொழியினால் மிக மோசமான நிலை எமது நாட்டில் ஏற்பட்டது. அத்தகைய சூழ்நிலைகள் இனிவரும் காலங்களில் ஏற்படாதிருக்க அனைவரும் அரச கருமமொழிகள் கொள்கைகளை சரியான முறையில் பின்பற்ற வேண்டும். தேசிய ரீதியான மொழி உரிமையினை பாதுகாக்க மொழி தொடர்பான முறைப்பாடுகளை எமக்கு அறிய தரலாம். அவ்வாறான முறைப்பாடுகளை எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வருகைதந்து சமர்பிக்கலாம். துரிதமாக அரச மொழி கொள்கையினை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம் என அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர். ரணவக்க தெரிவித்தார்.**

அரச கரும மொழிகள் தினம் மற்றும் அரச கரும மொழிகள் வாரத்தை நடைமுறைபடுத்துவது தொடர்பான விசேட ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மொழி உரிமை தொடர்பிலான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளகூடிய அதிகாரத்தை அரச ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக எமது ஆணைக்குழு நான்கு முறைகளில் செயற்பட்டுவருகின்றது. அரச கருமமொழிகள் கொள்கைகளை நடைமுறைபடுத்துவற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

தேசிய ரீதியான மொழி உரிமையினை பாதுகாக்க மொழி தொடர்பான முறைப்பாடுகளை எமக்கு அறியதரலாம். மொழி தொடர்பான முறைப்பாடுகளை எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வருகை தந்து சமர்பிக்கலாம். துரிதமாக அரச மொழி கொள்கையினை மேம்படுத்த பல்வேறான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம்.

குறிப்பாக கடந்த காலங்களில் மொழியினால் எத்தகைய மோசமான நிலை எமது நாட்டில் ஏற்பட்டுள்ளது. அத்தகைய சூழ்நிலைகள் இனிவரும் காலங்களில் ஏற்படாதிருக்க அனைவரும் அரச கருமமொழிகள் கொள்கைகளை சரியான முறையில் பின்பற்ற வேண்டும்.

இலங்கையை போன்ற பல்லின, பல்மத மற்றும் பல் வேறு கலாசாரங்களை கொண்ட அழகிய தேசம் வேறு எங்கும் கிடையாது.

நாம் தமிழர், சிங்களவர், இஸ்லாமியர் என்ற கொள்கையினை விடுத்து "நாம் இலங்கையர்" என்ற என்ற ஒருமைப்பாட்டுக் கொள்கையை ஏற்க வேண்டிய கட்டாயம் இன்றைய சமூகத்திற்கு ஏற்பட்டுள்ளது. இந்த ஒருமைப்பாட்டு நோக்கமே எங்களது வலிமையான குறிக்கோளாகும்-என்றார். (அ)

# முன்னாள் அமைச்சர் வீட்டு லிப்டில் பெண் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 02

முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் பொரளை வீட்டில் பணிப்பெண் ஒருவர் லிப்ட்டில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

பொரளை பொலிஸாரின் தகவல்படி, இறந்தவர் வீட்டில் பணிபுரிந்த 68 வயதுடைய பெண்.

வீட்டின் வெளியே அமைந்துள்ள லிப்ட்டில் தரை தளத்திலிருந்து மேல் தளத்துக்குச் செல்லும்போது, கொங்கிரீட் தூணில் தலை மோதியதால் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் குறித்து பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலி விளம்பரம்!

கொழும்பு, ஜூலை 02

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலி விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

டுபாயில் வேலை செய்த இலங்கையர் ஒருவர் டுபாயில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி சமூக ஊடகங்களில் போலி விளம்பரங்களை பதிவிட்டு பண மோசடியில் ஈடுபட்டு வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

"எமது வெளிநாட்டு வேலை வாய்ப்பு சேவையின் ஊடாக பல நபர்கள் பயனடைந்துள்ளனர்" என கூறி சமூக ஊடகங்களில் பகிரப்படும் போலி விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பொதுமக்களிடம் கேட்டுள்ளது.

இவ்வாறான போலி விளம்பரங்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்தால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 1989 என்ற அவசர தொலைபேசி இலக்கம் அல்லது 0112864123 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

# வட்ஸ்அப் மோசடிகள் பொலிஸ் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 02

அதிகமாக மக்களின் பாவனைக்குட்படுத்தப்படும் வாட்ஸ்அப் செயலியில் பல்வேறு மோசடிகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த மோசடிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க இலங்கை பொலிஸ் பிரிவு மக்களுக்கு அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

அதன்படி, தனிப்பட்ட வட்ஸ்அப் கணக்குகளை ஹக் செய்யும் நபர்களால் நிதி மோசடிகள் இடம்பெற்று வருகின்றது என பொலிஸ்பிரிவு பொதுமக்களை எச்சரித்துள்ளது.

அவ்வாறு மோசடி செய்யப்பட்ட வாட்ஸ்அப் கணக்குகளை மீட்டெடுக்க support@whatsapp.com என்ற முகவரியைத் தொடர்பு கொள்ளலாம் என்று பொலிஸ் பிரிவு அறிவித்துள்ளது. மேலும் இது போன்ற சம்ப வங்கள் தொடர்பாக பொது மக்கள் https://telligp.police.lk என்ற இணையவழியாக பொலிஸ் சைபர் கிரைம் பிரிவில் புகார் அளிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மீன் வலையில் சிக்கிய ரி-56!

கொழும்பு, ஜூலை 02

மஹியங்கனை, மாபாகட வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவரின் வலையில் ரி-56 துப்பாக்கியொன்று நேற்று செவ்வாய்க்கிழமை சிக்கியுள்ளதாக மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து உடனடியாக சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் துப்பாக்கியை கைப்பற்றியுள்ளனர்.

பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்தவின் அறிவுறுத்தலின் பேரில், மஹியங்கனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன வீரசிறியின் வழிகாட்டுதலின் கீழ் மஹியங்கனை பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# குற்றத்தை நேற்று ஒப்புக்கொண்டார் ஹர்ஷ இலுக்பிட்டிய

கொழும்பு, ஜூலை 02

ஈ-விசா வழங்கும் செயல்முறை தொடர்பாக நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை அமுல்படுத்தத் தவறியதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய, உயர் நீதிமன்றத்தில் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து, அவருக்கான தண்டனை விவரங்கள் எதிர்வரும் 24ஆம் திகதி அறிவிக்கப்படும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (அ)

# கட்சி ஒழுக்கத்தை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கமுடியாது!

## தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 02

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகங்கள் அமைக்கப்படும் போது, கட்சி மாறுபவர்கள் அல்லது கட்சி ஒழுக்கத்தை மீறுபவர்கள் தொடர்பில், நடவடிக்கை எடுக்க முடியாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் சட்டத்தில் அதற்கான இடமில்லை என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க கண்டியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போது குறிப்பிட்டார்.

தேர்தல் சட்ட சீர்திருத்தங்கள் குறித்த பொது ஆலோசனை நிகழ்வின்போது அவர் இதனை ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

நாட்டின் பல இடங்களிலும் கட்சி மாறும் மற்றும் கட்சியின் ஒழுக்கத்தை மீறும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கே, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் இந்த பதிலை வழங்கியுள்ளார். (அ)

# மீன்பிடிக்க சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 02

கண்டியில் கம்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரத்மல்கடுவ குளத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நபரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ)

# சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவருக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, ஜூலை 02

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்கவை ஜூலை 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க தலைமை நீதிபதி தனுஜா லக்மாலி உத்தரவிட்டுள்ளார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷாந்த விக்ரமசிங்க, நேற்று சிறை அதிகாரிகளால் கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட நிலையிலேயே குறித்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் கட்டண குறைப்பு உடன் இடைநிறுத்தம்!

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

கொழும்பு, ஜூலை 02

**நேற்று நடைமுறைக்கு வரவிருந்த 2.5 வீத பஸ் கட்டணக் குறைப்பு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (வேஹ) தெரிவித்துள்ளது.**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை அதிகரிப்பே இதற்கான காரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்ட நிலையில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பஸ் கட்டண அமைப்பை மீண்டும் பரிசீலிக்கத் தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக் குழு பேச்சாளர் தெரிவிக்கையில்- முன்னதாக அறிவிக்கப்பட்ட 2.5 வீத கட்டணக் குறைப்பு நேற்று நடைமுறைக்கு வரவில்லை.

எரிபொருள் விலை மாற்றத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்த பிறகு ஒரு புதிய கட்டண அமைப்பு வெளியிடப்ப டும்-என்றார்.

# சி.ஐ.டி பணிப்பாளராக ஷானி; எதிர்க்கின்றது மொட்டு கட்சி

கொழும்பு, ஜூலை 02

“தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்ற ஷானி அபேசேகர, குற்றப்புலனாய்வு பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை பாரதூரமான விடயமாகும்.”

-இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜே.வி.பி. அலுவலகத்தில் ஊடக சந்திப்பை நடத்தி, அக்கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்ற ஷானி அபேசேகர குற்றப் புல னாய்வு பிரிவின் பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது பாரதூரமான விடயமாகும். இதற்கு முன்னர் எந்தவொரு அரசாங்கமும் இப்படி செயற்பட்ட தில்லை.

தமக்கு தேவையான விதத்தில் சட்டத்தை செயற்படுத்தவும், அரசியல் எதிராளிகளை பழிவாங்கும்-ஒடுக்கும் நோக்கிலுமே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கட்சியாக இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்-என்றார். (அ)

# அதிக விலைக்கு அரிசியை விற்பபோருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 02

அரிசிக்கு அதிகபட்ச சில்லறை விலை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்க சோதனைகள் நடத்தப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வர்த்தமானி அறிவிப்பின் மூலம் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட விலையை விட அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்வது சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை மேலும் கூறியது.

அதன்படி, அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்பவர்களை அடையாளம் காண சோதனைகளை நடத்தப்போவதாகவும், அத்தகைய மீறுபவர்கள் குறித்து நுகர்வோர் நுகர்வோர் விவகார அதிகார சபையிலும் முறைப்பாடு அளிக்கலாம் என்றும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

அலுவலக நேரங்களில் 1977 என்ற துரத இலக்கம் மூலமாகவும் பொதுமக்கள் முறைப்பாடுகளை தெரிவிக்கலாம் என்று அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதிகபட்ச விலை

-வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி - ஒரு கிலோ 220 ரூபா

-வெள்ளை மற்றும் சிவப்பு நாட்டரிசி - ஒரு கிலோ 230 ரூபா

-வேகவைத்த வெள்ளை மற்றும் சிவப்பு சம்பா - ஒரு கிலோ 240 ரூபா

-கீரி சம்பா -ஒரு கிலோ 260 ரூபா. (அ)

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களை சீர்குலைக்கவுள்ள அரசின் கொள்கைகள்!

## எரிசக்தி உருவாக்குநர் கூட்டமைப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 02

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களுக்கான கட்டணங்களை குறைக்கும் அரசாங்கத்தின் சமீபத்திய முடிவுகள் எதிர்காலத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உருவாக்குநர்களின் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், இந்தக் கூட்டமைப்பு தனது கடுமையான எதிர்ப்பை தெரிவித்தது.

கட்டணங்களில் 30 வீதத்துக்கும் அதிகமாக செய்யப்பட்டுள்ள குறைப்புகள், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பிளவு அடையச் செய்துள்ளதாகவும், வேலை இழப்புக்கான அச்சங்களை ஏற்படுத்துவதாகவும் கூட்டமைப்பு தெரிவித்தது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உருவாக்குநர்களின் கூட்டமைப்பின் தலைவர் தெரிவிக்கையில்-

இலங்கையின் எரிசக்தி எதிர்காலத்துக்கான முக்கிய கட்டத்தில் இருக்கிறோம்.

ஆனால் அதி காரிகளின் சமீபத்திய கொள்கை கள், பல ஆண்டுகளாகப் பெறப் பட்ட முன்னேற்றங்களை பின்வாங்கச் செய்கின்றன.

இது தொழில்து றையை நிச்சயமற்ற நிலைக்கு தள்ளும்-என்றார்.

அத்துடன், இலங்கை மின்சார சபை தொடர்ந்தும் குறைந்த விலைக்கான கொள்முதல் ஒப்பந்தங்களை அமல்படுத்தி வருவது மற்றும் பேட்டரி ஆற்றல் சேமிப்பு அமைப்புகளுக்கான திட்டங்களை வெகுவாக பின்தள்ளிவைத்திருப்பது, சூரிய சக்தி வளர்ச்சிக்கு தடையாக இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை மாற்று விகிதங்கள், பணவீக்கம், வட்டி விகிதங்கள் போன்ற அடிப் படை பொருளாதார அடையாளங்களில் பெரிய மாறுபாடுகள் இல்லாத நிலையில் 30 வீதம் விலை குறைப்பு அறிவி யல் ரீதியாக நியாயமற்றது என வும், இந்த மாற்றங்கள் இழப்புகளையும் முதலீட்டு நம்பிக்கையையும் பாதிக்கக்கூடும் எனவும் கூட்டமைப்பு கூறுகிறது. (அ)

# 1 கோடி ரூபாய் பெறுமதியான சட்டவிரோத உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் மீட்பு!

கொழும்பு, ஜூலை 02

கம்பளை-கம்பளை-கண்டி பிரதான வீதியில், முருகன் ஆலயம் முன்பாக செயற்பட்டு வந்த உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையமொன்று பொலிஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டது.

குறித்த விற்பனை நிலையம் சட்டவிரோதமாக காலாவதியான உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை விற்பனை செய்து வருவதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான உரங்கள் மற்றும் வேளாண் இரசாயனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காலாவதியான உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள், பதிவு செய்யப்படாத மற்றும் அடையாளம் காணப்படாத இரசாயனப் பொருட்கள், தடைசெய்யப்பட்ட நச்சுத் தன்மையுள்ள களைக்கொல்லிகள், 2014ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மிகவும் பழைய உர வகைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை, குறித்த விற்பனை நிலையம் அண்மையில் இலவசமாக வழங்கப்பட்ட உரங்களை விவசாயிகளிடமிருந்து திரட்டி விற்பனை செய்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சட்டபூர்வமாக விற்பனை செய்யப்படும் உரங்களுக்கிடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த இரசாயனங்கள், விவசாயிகளின் உடல்நலதத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடியவை என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (அ)

# 219 உள்ளூராட்சி சபைகளில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி!

கொழும்பு, ஜூலை 02

நாடு முழுவதும் இதுவரை 219 உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியை நிறுவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் எந்த ஒரு கட்சிக்கும் தெளிவான பெரும்பான்மை கிடைக்காத 63 மன்றங்களும் அடங்கும்.

ஆனால் அங்கு தேசிய மக்கள் சக்தியால் நிர்வாகக் கட்டுப் பாட்டை உருவாக்க முடிந்தது.

இதற்கிடையில், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதனுடன் இணைந்த எதிர்க்கட்சிகள் தற்போது 87 உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தைக் கொண்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி அமைத்த 30 உள்ளூராட்சி மன்றங்களில், 28 இற்கு முழுமையான பெரும்பான்மை இல்லை.

ஆனால் அவை குறிப்பிடத்தக்க கூட்டணி அல்லது கூட்டணி சார்ந்த நிர்வாக கட்டமைப்புகள் மூலம் உருவாக்கப்பட்டன.

இதேவேளை, இலங்கை தமிழ் அரசு கட்சி 20 உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

இது ஒரு கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்றாவது அதிக எண்ணிக்கையிலான உள்ளூராட்சி அமைப்புகளைக் குறிக்கிறது.

நேற்று முன் தினம் நிலவரப்படி, 19 உள்ளூராட்சி மன்றங்களில் சுயேச்சைக் குழுக்கள் அல்லது பிற அரசியல் கட்சிகள் கட்டுப்பாட்டை நிறுவியுள்ளன.

அவற்றில், பொதுஜன பெரமுன மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலா 06 உள்ளூராட்சி மன்றங்களிலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 03 உள்ளூராட்சி மன்றங்களிலும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் முன்னணி தலா 02 உள்ளூராட்சி மன்றங்களிலும் அதிகாரத்தை நிறுவியுள்ளன.

பல்வேறு காரணங்களால் நீதிமன்ற உத்தரவுகளின் கீழ் 18 உள்ளூாராட்சி மன்றங்களின் உருவாக்கம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மே 06 அன்று நடைபெற்ற 2025 உள்ளூராட்சித் தேர்தலைத் தொடர்ந்து, தற்போது வரை 339 உள்ளூராட்சி மன்றங்களில் 315 சபைகளில் ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. (அ)

# சிறுவர்கள் யாசகம் எடுப்பது தொடர்பான சட்டங்கள் நேற்று முதல் கடுமையாகின!

கொழும்பு, ஜூலை 02

16 வயதிற்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் மற்றும் 16 முதல் 18 வயது வரையிலான சிறுவர்களை வீட்டு வேலைகள் உள்ளிட்ட ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்துவதை நேற்று முதல் முற்றிலுமாக தடை செய்வதற்கான தற்போதைய சட்ட ஏற்பாடுகளை கடுமையாக அமல்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் திருத்த சட்டத்தின் ஸ்ரீபடி, 18 வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்களாக கருதப்படுகிறார்கள். மேலும் 16 வயது வரை ஒரு குழந்தையின் கட்டாயக் கல்வியின் வயதாகக் கருதப்படுகிறது.

16 வயதிற்குட்பட்ட ஒரு குழந்தை பாடசாலைக்கு செல்லாவிட்டால், அதை எதிர்க்க சட்டபூர்வ ஏற்பாடுகள் உள்ளன, மேலும் இந்த சட்டம் நேற்று முதல் கடுமையாக செயல்படுத்தப்பட வேண்டும் என சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கமான சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப முன்வாருங்கள்!

## மகா சங்கத்தினருக்கு ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, ஜூலை 02

**அதிகாரம் மற்றும் செல்வத்தின் முன்பாக அனைத்து நல்ல விடயங்களையும் அழித்து, பாதகமான மதிப்புகளைச் சேர்த்த ஒரு சமூகத்தில் மனிதாபிமான உயிரூட்டத்தை மீண்டும் கொண்டு வருவதன் மூலம் ஒழுக்கமான சிறந்த சமூகமாகக் கட்டியெழுப்ப வேண்டும். அவ்வாறு செய்வதற்கு இந்த நாட்டின் மகா சங்கத்தினர் பெரும் பங்களிப்பைச் செய்ய முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**



கல்னேவா மகாவலி மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற இலங்கை ராமான்ய மகா பீடத்தின் 74 ஆவது உபசம்பதா மஹோத்சவத்தின் தொடக்க விழாவில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி-

உடல் ரீதியாக எட்ட வேண்டிய வெற்றிகள் போன்றே ஆன்மீக ரீதியாகவும் அடைய வேண்டிய பல சாதனைகள் உள்ளன.

நீண்ட காலமாக இரக்கம், கருணை மற்றும் அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட தர்மத்தைப் போதித்து, அந்த தர்மத்தை செவிசாய்த்த ஒரு நாட்டுக்கு இன்று நேர்ந்துள்ள நிலைமையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, ஒழுக்கமான மற்றும் சிறந்த சமூகத்தை உருவாக்கும் பொறுப்பை நிறைவேற்ற அனைவரும் தாமதமின்றி ஒன்றிணைந்து அர்ப்பணிக்கவேண்டும். பௌத்த மதத்தின் நிலைத்தன்மையைப் பேணுவதில் உபசம்பதா போன்றன மிகவும் முக்கியமானவை.

மேலும், சில அரசியல் குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். அதன் ஊடாக அரசியல்வாதிகளன்றி வடக்கிலும் தெற்கிலும் உள்ள அப்பாவி பெற்றோர்களின் பிள்ளைகளே பலியானர்.

இனவாதத்தை நிராகரித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப பாடுபட வேண்டும், அனைவருக்கும் ஜனநாயக ரீதியாகவும் சுதந்திரமாகவும் செயல்படும் திறன் இருந்தாலும், இனவாதம் மீண்டும் ஒருபோதும் தலைதூக்க அனுமதிக்கப் போவதில்லை.

எனவே, இனவாதத்தை நிராகரித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு சட்டங்கள் போதுமானதாக இல்லாவிட்டால், சட்டங்கள் பலப்படுத்தப்பட்டு இனவாதம் தோற்கடிக்கப்படும். சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக வாழும் ஒரு சமூகத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்-என்றார்.

(அ)

# இந்தியத் தூதுக்குழு பிரதமருடன் சந்திப்பு



கொழும்பு, ஜூலை 02

இந்திய தொழில்துறை சம்மேளனத்தின் தலைமை நிர்வாக அதிகாரிகள் தூதுக்குழுவிற்கும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இடையேயான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த சந்திப்பு பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, குறிப்பாக பொருளாதாரத்தை இயல்புநிலைக்கு கொண்டு வருவதற்கும் அதன் வளர்ச்சிக்காகவும் இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் தொடர்ச்சியான ஒத்துழைப்பு குறித்து பிரதமர் தனது பாராட்டினைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க சமீபத்திய இந்திய விஜயத்தின் மூலம் இரு நாடுகளின் பொருளாதார உறவுகள் மேலும் பலப்பட்டுள்ளதாக இந்திய தூதுக்குழு இங்கு மேலும் உறுதிப்படுத்தியது.

தொழில்நுட்பம், உற்பத்தி, கல்வி, புத்தாக்கம், தொழில்முனைவு, விவசாயம், வலுசக்தி மற்றும் சுற்றுலா துறை போன்ற முக்கிய பிரிவுகள் மூலம் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவது குறித்தும் இந்தக் கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.

இளைஞர்களை வலுவூட்டுதல், பெண் தொழில்முனைவோர், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவு ஆகியவற்றுக்கு ஆதரவாக செயல்பட நியாயமான முதலீட்டு மூலோபாயங்களின் முக்கியத்துவத்தை பிரதமர் இதன்போது வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பில் இந்திய உயர்மட்ட தலைமை நிர்வாக அதிகாரிகள் மற்றும் இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அதிகாரிகள், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, வெளியுறவு அமைச்சின் தெற்காசிய மற்றும் சார்க் பிரிவின் பணிப்பாளர் நாயகம் நிலூக்க கதுருகமுவ மற்றும் அதே அமைச்சின் தெற்காசிய பிரிவின் துணை பிரதி பணிப்பாளர் பிரசாந்தி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# காஸ் விலை மாற்றமில்லை!

கொழும்பு, ஜூலை 02

2025 ஜூலை மாதத்திற்கான உள்நாட்டு சமையல் எரிவாயு விலையில் எந்த மாற்றமும் இருக்காது என்று லிட்ரோ காஸ் லங்கா லிமிடெட் நிறுவனமும் அறிவித்துள்ளது.

அதன்படி, லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் பின்வருமாறு

12.5 கிலோ கிராம் - ரூ. 3,690
5 கிலோ கிராம் - ரூ. 1,482
2.3 கிலோ கிராம் - ரூ. 694

இதற்கிடையில், ஜூலை மாதத்திற்கான உள்நாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலையில் எந்த திருத்தமும் இருக்காது என்று லாப்ஸ் எரிவாயு நிறுவனமும் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜூலை 1 முதல் அமுலுக்கு வந்துள்ள சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட வட்டி

கொழும்பு, ஜூலை 02

2025 வரவு-செலவு திட்டத்தின் அடிப்படையில், அமைச்சரவை ஒப்புதலுக்கு அமைய ஜூலை 1 முதல் அமுலுக்கு வரும் வகையில் "சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட வட்டி திட்டம் - 2025" தொடங்கப்படுவதை நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் திட்டம் இலங்கையில் உள்ள சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புகளுக்கு மேம்பட்ட வருமானத்தை வழங்குவதன் மூலம் கூடுதல் நிதி ஆதரவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கை குடிமக்களுக்கு இது பொருந்தும். இந்தத் திட்டத்தின் கீழ் நிலையான வைப்புத்தொகைகளை ஜூலை 1 முதல் டிசெம்பர் 31, 2025 வரையிலான காலகட்டத்தில்திறக்கலாம்

மேலும் அத்தகைய அனைத்து வைப்புத்தொகைகளும் 12 மாத நிலையான வைப்பு காலத்தைக் கொண்டிருக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் கீழ் வைப்புத் தொகைகளின் மொத்த மதிப்பு, பங்கேற்கும் வங்கிகளின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல், ஒரு வைப்புத்தொகையாளருக்கு ரூ. 1 மில்லியனுக்கு மிகையாகாமல் இருக்கவேண்டும்.

மேலும் ஆண்டுக்கு 1 மில்லியன் ரூபாய் நிலையான வைப்புகளுக்கு நடைமுறையில் உள்ள சந்தை வட்டி விகிதத்தை விட 3 சதவீத வருடாந்த வட்டி விகிதத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி சூட்டில் இளைஞர் பலி!

கொழும்பு, ஜூலை 02

கஹவத்த - யாயன்னா பகுதியில் நேற்று முன் தினம் இரவு நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், காயமடைந்த மற்றொரு இளைஞன் கஹவத்த ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஹவத்த யாயன்னா கொஸ் கெல்ல பகுதியில் உள்ள ஒரு வீட்டுக்கு நேற்று முன் தினம் இரவு சென்ற நான்கு பேர் வீட் டிலிருந்து இரண்டு இளைஞர் களைக் கடத்திச் சென்றுள்ள னர்.

பின்னர் இருவரும் வெறிச் சோடிய பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு குறித்த இளைஞர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 22 வயது இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அதே நேரத்தில் காயமடைந்த 27 வயதான இளைஞன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கஹவத்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சக ஊழியரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞன் கொலை!

கொழும்பு, ஜூலை 02

களுத்துறையில் மொரொன்துடுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோனதுவ, கவடயாகொடை பிரதேசத்தில் சக ஊழியரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞன் ஒருவன் கொலை செய்யப்பட்டுள்ளதாக மொரொன்துடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

அலுவலகத்தில் பணிபுரியும் சக ஊழியருக்கும் இளைஞனுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# காமினி லொக்குகே காலமானார்

கொழும்பு, ஜூலை 02

முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே தனது 82 ஆவது வயதில் நேற்று முன் தினம் காலமானார்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே அவர் காலமானார்.

சுதந்திரக் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் முன்னாள் அரசியல்வாதியுமான காமினி லொக்குகே இறக்கும்போது பொதுஜன பெரமுனவின் உறுப்பினராக செயற்பட்டார்.

பல ஆண்டுகால அரசியல் அனுபவத்தை கொண்ட காமினி லொக்குகே, விளையாட்டுத் துறை, வலுச்சக்தி, போக்குவரத்துத்துறை போன்ற துறைகளில் அமைச்சராக செயற்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்தி 40 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக தேசிய அரசியலில் தன்னை அவர் முன்னிலைப் படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 143 பேர் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 02

நுளம்பு கட்டுப்பாட்டு தேசிய வாரம் நேற்று முன் தினம் ஆரம்பமான நிலையில், நேற்று முன் தினம் மட்டும் 143 பேர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இராணுவத்தினர், பொலிஸ் அதிகாரிகள், சிவில் பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் பொது சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர் சுகாதார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மாத்திரம் 22 ஆயிரத்து 318 இடங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 4 ஆயிரத்து 481 இடங்கள் டெங்கு நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள தாகவும், இரத்தினபுரி மாவட் டமே, டெங்கு நுளம்பு இனப்பெருக்கத்தின் அதிக விகிதத்தைப் பதிவு செய்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# உணவு ஒவ்வாமையால் 22 மாணவர்கள் பாதிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 02

**மட்டக்களப்பு, கரடியனாறு பகுதியில் பாடசாலை ஒன்றில் வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமையால் வயிற்றுவலி ஏற்பட்ட நிலையில், 22 மாணவர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.**

குறித்த பாடசாலையில் சத்துணவு திட்டத்தின் கீழ் சோறுடன் கோழி இறைச்சி கறி தயாரித்து சம்பவதினமான நேற்று முன்தினம் பகல் 195 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதனை உட்கொண்ட சில மாணவர்களுக்கு வயிற்றுவலி ஏற்பட்டதையடுத்து, அவர்கள் உடனடியாக அருகிலுள்ள கரடியனாறு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதில், மேலதிக சிகிச்சைக்காக 16 மாணவர்கள் மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

இது தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து பாடசாலையின் முன் பெற்றோர்கள் ஒன்று திரண்டனர். இதனால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதேவேளை கடந்த மாதம் இதே பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் உணவு ஒவ்வாமை ஏற்பட்டு 25 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் வாந்தி, மயக்கம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதுடன், உணவு வழங்கிய பெண் கைது செய்யப்பட்டமை குறிப்பிடதக்கது. (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் வியாபாரிகள் மூவர் கைது

காத்தான்குடி, ஜூன் 02

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி மற்றும் காங்கேயனோடை பகுதிகளில் கடந்த 29 ஆம் திகதி இரவு பொலிஸார் மேற்கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கைகளின்போது பெருமளவு ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பரீனாஸ் வீதியில் 2350 மில்லி கிராம் போதைப் பொருளுடன் ஒரு ஐஸ் வியாபாரியும் காங்கேயனோடை ஈரான் சிற்றி பகுதியிலிருந்து 2300 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் மற்றொரு ஐஸ் வியாபாரியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை காங்கேயனோட ஈரான் சிற்றி பகுதியிலிருந்து 1085 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இன்னுமொரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் 36, 35, 40 வயதுடையவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் கீழ் போதை ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இந்த மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றன. இதன் ஒரு கட்டமாகவே இந்தக் கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)



# மரத்தில் மோதி பஸ் விபத்து; சாரதி உட்பட மூவர் படுகாயம்

மட்டக்களப்பு, ஜூலை 02

மட்டக்களப்பு, கிரான்குளம் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் மூவர் படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.


இந்த விபத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றதாக பொலிஸார் கூறினர்.

கதிர்காமம் புனித யாத்திரையை நிறைவு செய்த யாத்திரிகர்களை ஆரையம்பதியில் இறக்கிவிட்டு மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி வழியே தேற்றாத்தீவு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த பஸ், கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயத்துக்கு அருகாமையில் வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரத்தின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பஸ் சாரதியும் உதவியாளர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கல்முனை வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரிப்பு



கல்முனை, ஜூலை 02

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகள் தினமும் நடமாடுவதால் பொதுப் போக்குவரத்துக்கு சிரமம் ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் பகல் - இரவு முழுவதும் ஆக்கிரமித்துள்ள கட்டாக்காலி மாடுகள் தினமும் பொதுப் போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தும் வகையில் நடமாடி வருகின்றன.

இந்தப் பகுதியில் உள்ள அரச, தனியார் நிறுவனங்களுக்கு முன்பாக தினமும் மாடுகள் நடமாடுவதால், அப்பகுதிகள் சுகாதார சீர்கேடான இடங்களாக மாற்றமடைந்ததோடு, அவ்விடமெங்கும் துர்நாற்றம் வீசுகிறது.


மேலும், கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம், கல்முனை மாநகர சபை, கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை, கல்முனை பிரதான பேருந்து தரிப்பிடம், இலங்கை மின்சார சபை, கல்முனை பிரதேச செயலகம், வங்கிகள் உட்பட பல பகுதிகளில், இரவு வேளைகளில் நடமாடும் கட்டாக்காலி மாடுகள் மற்றும் நாய்களால் பல்வேறு சேதங்கள் ஏற்பட்டு வருகின்றன.

மாடுகளால் ஏற்படும் போக்குவரத்து இடைஞ்சலால் ஏற்படும் விபத்துக்களை குறைக்கும் வகையில் கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபை மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்தபோதிலும் தற்போது இந்த விடயத்தில் கவனம் செலுத்தாதுள்ள நிலை காணப்படுகிறது.

இதனால், பிரதான வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகளில் மாடுகள் படுத்துறங்குவது, நிற்பது பொதுமக்கள், வாகனச் சாரதிகளுக்கு பல சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது. (எ)







திருகோணமலை விஸ்வநாத சுவாமி (சிவன்) கோவில் வருடார்ந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
படங்கள்:- விபூஷன்



# கல்வி மேம்பாட்டுக்கு நிதியுதவி

கல்முனை, ஜூலை 02

அம்பாறை மாவட்டம் கல்முனை பஹ்ரியன்ஸ் 2002 ஓ. எல். பழைய மாணவரினால் மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களின் அடைவு மட்டத்தை விருத்தி செய்வதற்கான செயலமர்வுகள், விசேட வகுப்புக்கள் என்பனவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான நிதியுடன் கடந்த கால வினாப்பத்திர பொதியை பெற்றுக் கொள்வதற்கான நிதியும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழங்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரேல் இராணுவம் கொடூர தாக்குதல்:

# காஸாவில் உணவு தேடி வந்த சிறுவர்கள் உட்பட 74 பேர் பலி



காஸா, ஜூலை 02

**காஸாவில் உணவு தேடி வந்த சிறுவர்கள், பெண்கள் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 74 பேர் பலியாகினர்.**

ஈரானுடன் போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டதால், இஸ்ரேல் தனது கவனத்தை காஸா பக்கம் திருப்பியுள்ளது. வடக்கு காஸாவில் வசிக்கும் பலஸ்தீனியர்கள் உடனடியாக மொத்தமாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் ஹமாஸ் அமைப்பினர் மீது மிகப்பெரிய தாக்குதலை தொடங்க இருப்பது தெளிவாகிறது.

இந்தப் பின்னணியில், காஸாவில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்திருந்தார். ஹமாஸ் அமைப்பினரின் பிடியில் உள்ள பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார்.

ட்ரம்ப் பதவியேற்றவுடன் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 8 வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, மீண்டும் சண்டை தொடங்கியது.

இருதரப்புக்கும் இடையே போர் நிறுத்தம் கொண்டுவர ட்ரம்ப் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றிபெறவில்லை. இதற்கிடையே, வரும் வாரங்களில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்கா செல்வார் என்று இஸ்ரேல் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எனவே, போர் நிறுத்த பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்த நிலையில், காஸாவில் இஸ்ரேலிய இராணுவம் உணவகம் மற்றும் உணவு தேடி வந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 74 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.


முன்னதாக இஸ்ரேலியப் படைகள் காஸாவில் கடலோர ஹோட்டலில் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 30 பேர் உயிரிழந்தனர். மேலும், போரினால் பாதிப்பட்ட பலஸ்தீனியர்கள், தங்களுக்கு தேவையான உணவு - உதவியைப் பெற முயன்றபோது துப்பாக்கிச் சூட்டில் 23 பேர் கொல்லப்பட்டனர் என்று அங்குள்ள சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஸா நகரில் உள்ள அல்-பக்கா கபே மீது ஒரு வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போது அது பெண்கள் மற்றும் குழந்தைகளால் நிரம்பியிருந்தாக கூறப்படுகிறது. மேலும், 10 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பலர் கவலைக்கிடமாகவுள்ளனர். குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டனர் என்று வடக்கு காஸாவில் உள்ள சுகாதார அமைச்சின் அவசர மற்றும் அம்புலன்ஸ் சேவையின் தலைவர் பாரெஸ் அவாட் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், "எந்த முன்னறிவிப்பும் இல்லாமல், திடீரென்று ஒரு போர் விமானம் அந்த இடத்தைத் தாக்கியது. நிலநடுக்கம் போல அதை உலுக்கியது"- என்று பாரெஸ் அவாட் தெரிவித்தார். (எ)

# தன்சானியாவில் இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

## 40 பேர் உடல் நசுங்கிப் பலி



டோடோமா, ஜூலை 02

கிழக்கு ஆபிரிக்க நாடான தன்சானியாவில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிய கோர விபத்தில் சிக்கி 40 பேர் உடல் நசுங்கிப் பலியாகினர்.

தன்சானியாவின் கிளிமஞ்சாரோ மாகாணம் மோஷி நகரிலிருந்து தங்கொ நகருக்கு திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க 50இற்கும் மேற்பட்டோர் கடந்த சனிக்கிழமை இரவு சொகுசு பேருந்தில் சென்று கொண்டிருந்தனர்.

நெடுஞ்சாலையில் சபசபா என்ற பகுதியில் பேருந்து சென்று கொண்டிருந்தபோது வீதியில் எதிரே மற்றொரு பேருந்து வந்துகொண்டிருந்தது. அப்போது எதிர்பாராத விதமாக அந்த பேருந்தின் ரயர் வெடித்தது. இதனால், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து எதிரே வந்த சொகுசு பேருந்து மீது மோதியது. இந்தக் கோர விபத்தில் இரண்டு பேருந்துகளும் தீப்பற்றி எரிந்தன.

இதில் இரண்டு பேருந்துக்களுக்குள் இருந்தவர்களும் சிக்கிக் கொண்டனர். அக்கம்பக்கத்தினர் விரைந்து வந்து பேருந்தில் சிக்கி இருந்தவர்களை காப்பாற்ற முயற்சித்தனர். மேலும், தீயணைப்புத்துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. விரைந்து வந்த தீயணைப்பு, மீட்புக்குழுவினர் பற்றி எரிந்த தீயை அணைத்தனர். மேலும், இரு பேருந்துகளிலிருந்து மொத்தம் 30 பேரை காயங்களுடன் மீட்டனர். ஆனால், இந்த தீ விபத்தில் 2 பேருந்துகளிலும் பயணம் செய்த 40 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். (எ)



# இந்து பெண்ணுக்கு நீதி கோரி பல்கலை. மாணவர்கள் பேரணி

டாக்கா, ஜூலை 02

பங்களாதேஷில் இந்துப் பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொடூரமாக தாக்கப்பட்ட வழக்கில் அரசியல்வாதி உட்பட 5 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய நீதி வழங்கவும் குற்றவாளிகள் மீது நேரடியாக நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தி டாக்கா பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று முன்தினம் மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# கடவுளின் எதிரிகள் பழிவாங்கப்படுவர்!

## ட்ரம்ப், நெதன்யாகுவுக்கு ஈரான் மதகுரு எச்சரிக்கை

தெஹ்ரான், ஜூலை 02

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோர் கடவுளின் எதிரிகள் என்று அறிவித்து, அவர்களுக்கு எதிராக ஈரான் மதகுரு ஐயத்துல்லா மகரேம் ஷிராசி பத்வா பிறப்பித்துள்ளார். பத்வா என்பது மத குருக்களால் வழங்கப்படும் தீர்ப்பு என்று அழைக்கப்படுகிறது. மேலும், "ட்ரம்ப் மற்றும் நெதன்யாகு சந்தேகத்துக்கு இடமின்றி பழிவாங்கப்படுவர்"என்றும் அவர் கூறினார்.

ஈரான் மதகுரு ஐயத்துல்லா நாசர் மகரேம் ஷிராசி அரபு மொழியில் வெளியிட்ட பத்வாவில், "இஸ்லாம் மதத்துக்கு தூணாக இருப்பவர்களுக்கு, குறிப்பாக உச்ச தலைவரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுப்பது இஸ்லாம் மத அமைப்பில் தடை செய்யப்பட்டுள்ளது. இஸ்லாம் மத தலைவர்களைப் பாதுகாப்பதும், அத்தகைய அச்சுறுத்தல்களைச் செய்பவர்களை எதிர்கொள்வதும் நமது கடமையாகும். மேலும் இந்த புனிதத்தை மீறுவது மிகப்பெரிய பாவங்களில் ஒன்றாகும்.

இஸ்லாமிய குடியரசு தலைமையை அச்சுறுத்தியதற்காக அமெரிக்க மற்றும் இஸ்ரேல் தலைவர்களை வீழ்த்த உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும். இந்த எதிரிகளுக்கு முஸ்லிம்கள் அல்லது இஸ்லாமிய அரசுகள் அளிக்கும் எந்தவொரு ஆதரவும் தடை செய்யப்பட்டதாகக் கருதப்படும்"- என்றார். (எ)

# இஸ்ரேல் தாக்குதலில் ஈரானில் 935 பேர் பலி

தெஹ்ரான், ஜூலை 02

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 935 பேர் உயிரிழந்ததாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதாக கூறி அந்த நாடு மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. 12 நாட்கள் நீடித்த இந்தத் தாக்குதல் அமெரிக்காவின் தலையீட்டை தொடர்ந்து போர் முடிவுக்கு வந்தது. இந்தத் தாக்குதலில் 610 பேர் உயிரிழந்ததாக ஈரான் முன்னர் கூறியிருந்தது.

இந்த நிலையில், இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 935 பேர் உயிரிழந்தனர் என அந்த நாடு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. 38 குழந்தைகள், 132 பெண்கள் இதில் அடங்குகின்றனர்.

இதேவேளை, தெஹ்ரானின் எவின் சிறையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 71இல் இருந்து 79 ஆக அதிகரித்துள்ளதாக ஈரான் அரசாங்கம் அறிவித்துள்ளது. (எ)

# பாகிஸ்தானில் கனமழை மேலும் 18 பேர் உயிரிழப்பு

லாகூர், ஜூலை 02

பாகிஸ்தானில் 24 மணிநேரத்தில் கொட்டித் தீர்த்த கனமழையால் 18 பேர் பலியாகினர்.

பஞ்சாப் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் பருவமழை பெய்து பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இதில், நேற்று முன்தினம் இரவு 07. 00 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 11 குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்தனர். மழை தொடர் பான சம்பவங்களில் 57 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை, ஸ்வாத் ஆற்றில் திடீரென ஏற்பட்ட நீர்மட்ட அதிகரிப்பால் குடும்பத்துடன் சுற்றுலா சென்றவர்களில் 11 பேர் உயிரிழந்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விம்பிள்டன் ரென்னிஸில் அல்காரஸ் போராடி வெற்றி

லண்டன், ஜுலை 02

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் முதல் சுற்றில் கார்லஸ் அல்காரஸ் போராடி வெற்றி பெற்றார்.


"கிராண்ட்ஸ்லாம்" அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நேற்று முன்தினம் தொடங்கியது. சுட்டெரிக்கும் வெயிலுக்கு மத்தியில் முதல் நாளில் முதலாவது சுற்று ஆட்டங்கள் நடந்தன.

ஆண்கள் ஒற்றையர் தொடக்க நாளிலேயே நடப்பு சம்பியனும், 2ஆம் நிலை வீரருமான ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் முதல் தடையை கடக்க ஒரு யுத்தமே நடத்த வேண்டியிருந்தது. அவருக்கு தரவரிசையில் 138ஆவது இடத்தில் உள்ள இத்தாலியின் பாபியோ போக்னினி கடும் சவாலளித்து வியப்பூட்டினார்.

இதனால் அல்காரஸ் 5 செற் வரை தனது ஆற்றலை செலவழிக்க வேண்டியிருந்தது. 4 மணி 37 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் அல்காரஸ் 7-5, 6-7 (5-7), 7-5, 2-6, 6-1 என்ற செற் கணக்கில் போக்னினியை வீழ்த்தினார். விம்பிள்டனில் நடப்பு சம்பியன் முதல் சுற்றில் 5 செற் வரை போராடி வெல்வது 2010ஆம் ஆண்டுக்கு பிறகு இதுவே முதல் முறையாகும்.

உலக தரவரிசையில் 9ஆவது இடம் வகிக்கும் ரஷ்யாவின் டேனில் மெட்விடேவுக்கு, 64ஆம் நிலை வீரரான பிரான்ஸின் பெஞ்ஜமின் போன்ஜி அதிர்ச்சி வைத்தியம் அளித்தார். 3 மணி 7 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் பெஞ்ஜமின் 7-6 (7-2), 3-6, 7-6 (7-3), 6-2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார். 2017 முதல் விம்பிள்டனில் ஆடும் மெட்விடேவ் முதல் சுற்றோடு வெளியேறியது இதுவே முதல் முறையாகும். 8ஆம் நிலை வீரர் ஹோல்கர் ருனேவும் (டென்மார்க்) முதல் சுற்றுடன் வெளியேறினார்.

பிரான்சிஸ் டியாபோ (அமெரிக்கா), ஜிரி லெஹக்கா (செக்குடியரசு), நுனோ போர்கஸ் (போர்த்துக்கல்), கேமரூன் நோரி (இங்கிலாந்து) ஆகியோர் தங்களது ஆட்டங்




களில் வெற்றி பெற்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் நம்பர் 01 வீராங்கனை பெலாரஸின் அரினா சபலெங்கா 6-1, 7-5 என்ற நேர் செற்றில் தகுதி நிலை வீராங்கனையான கனடாவின் கார்சன் பிரான்ஸ்டினை தோற்கடித்து வெற்றியோடு தொடங்கினார்.

விம்பிள்டனில் இரண்டு முறை இறுதிப்போட்டிக்கு முன்னேறியவரான துனிசியாவின் ஆன்ஸ் ஜாபியர் 6-7(5), 0-2 என்ற செற் கணக்கில் பல்கேரியாவின் விக்டோரியா தோமோவாவுக்கு எதிராக பின்தங்கிய போது காயத்தால் கண்ணீருடன் பாதியில் வெளியேறினார்.

மேடிசன் கீஸ் (அமெரிக்கா), ஹேடட் மையா (பிரேசில்), டோனா வெகிச் (குரோஷியா), சோனா கர்தால் (இங்கிலாந்து), டயானா சினைதர் (ரஷ்யா), லேலா பெர்னாண்டஸ் (கனடா), ஸ்விடோலினா (உக்ரைன்) உள்ளிட்டோர் முதல் சுற்றை வெற்றிகரமாக கடந்தனர். (ஏ)



# அதிக சதங்கள் அடித்து டு பிளசிஸ் சாதனை

ஜார்ஜியா, ஜுலை 02

ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதங்கள் அடித்த அணித் தலைவர் என்ற உலக சாதனையை பாப் டு பிளஸ்சிஸ் படைத்துள்ளார்

அமெரிக்காவில் நடைபெற்று வரும் மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் - எம். ஐ. நியூயோர்க் அணிகள் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 223 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக பாப் டு பிளஸ்சிஸ் 103 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இதனையடுத்து 224 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய எம். ஐ. நியூயோர்க் அணியால் 9 விக்கெட்கள் இழப்புக்கு 184 ஓட்டங்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. இதனால் டெக்சாஸ் சுப்பர் கிங்ஸ் அணி 39 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் அடித்த சதத்தையும் சேர்த்து பாப் டு பிளஸ்சிஸ் அணித் தலைவராக ரி - 20 கிரிக்கெட் போட்டியில் இதுவரை 8 சதங்கள் அடித்துள்ளார். இதன் மூலம் ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதங்கள் அடித்த அணித் தலைவர் என்ற உலக சாதனையை படைத்துள்ளார். இந்த சாதனை பட்டியலில் விராட் கோலி 3ஆவது இடத்தில் உள்ளார்.

அந்தப் பட்டியல் வருமாறு,

1. பாப் டு பிளஸ்சிஸ் - 8 சதங்கள்,
2. மைக்கேல் க்ளிங்கர், பாபர் அஸாம் - 7 சதங்கள்,
3. விராட் கோலி - 5 சதங்கள்,
4. ஜேம்ஸ் வின்ஸ் - 2 சதங்கள் (ஏ)


# இங்கிலாந்து மகளிர் அணிக்கு அபராதம்

டுபாய், ஜுலை 02

இங்கிலாந்து மகளிர் அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் ரி - 20 போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 210 ஓட்டங்கள் குவித்தது. ஸ்மிருதி மந்தனா 112 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்கவில்லை. இதனால், இங்கிலாந்தின் அனைத்து வீராங்கனைகளுக்கும் போட்டிக் கட்டணத்திலிருந்து தலா 10 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. (ஏ)



# சிம்பாவேக்கு இமாலய இலக்கு

புலவாயோ, ஜுலை 02

சிம்பாவே அணிக்கு 520 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது தென்னாபிரிக்க அணி.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி, சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி புலவாயோவில் தொடங்கியது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 418 ஓட்டங்கள் எடுத்தது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் சிம்பாவே அணி 369 ஓட்டங்கள் எடுத்தது. இந்த நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 251 ஓட்டங்கள் சேர்த்தது. இதனால் சிம்பாவே அணிக்கு 520 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை நோக்கி நேற்றுத் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 68 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்களை பறிகொடுத்து தடுமாறியது. (ஏ)

# கிளப் உதைபந்தாட்ட தொடர் மெஸ்சி அணி வெளியேற்றம்

ஜார்ஜியா, ஜுலை 02

கிளப் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரிலிருந்து மெஸ்சியின் இண்டர் மியாமி அணி வெளியேற்றப்பட்டது.

கிளப் அணிகளுக்கான 21ஆவது உலகக் கிண்ண போட்டி அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. 32 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் லீக் சுற்று முடிவில் 16 அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றன.

இதில் ஜார்ஜியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் மெஸ்சி தலைமையிலான இண்டர் மியாமி அணி, பாரிஸ் செயிண்ட்- ஜெர்மைன் உடன் மோதியது.

தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன் அடுத்தடுத்து கோல்கள் போட்டு அசத்தியது. இண்டர் மியாமி அணி பதில் கோல் அடிக்க எவ்வளவோ முயற்சித்தும் அந்த அணியால் ஒரு கோல்



கூட அடிக்க முடியவில்லை.

முடிவில் பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன் 4-0 என்ற கோல் கணக்கில் இண்டர் மியாமி அணியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. தோல்வியடைந்த இண்டர் மியாமி அணி தொடரிலிருந்து வெளியேறியது. (ஏ)

# இந்தியா - இங்கிலாந்து 2ஆவது டெஸ்ட் இன்று

பர்மிங்காம், ஜுலை 02

இந்தியா - இங்கிலாந்து இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பிக்கிறது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்ஸில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளது.

2ஆவது போட்டி இன்று 2ஆம் திகதி பர்மிங்காமில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெற இந்திய அணி தீவிர பயிற்சியை மேற்கொண்டு வருகிறது.

இந்தப் பயிற்சியில் இளம் சுழற்பந்து வீச்சாளர் ஹர்ப்ரீத் பிரார் இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு பந்து வீசியது பலருக்கும் ஆச்சரியமாக அமைந்தது. இந்தத் தொடரில் தெரிவு செய்யப்படாத அவர் இந்திய அணியின் பயிற்சியில் இணைந்தது பலரது மத்தியில் பல விதமான கேள்விகளை எழுப்பியது. அவர் பந்து வீசும் வீடியோவை பி. சி. சி. ஐ. தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வோல்கரின்...

மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "காஸாவில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் மரணித்திருக்கும் நிலையில், 15 - 20 வருடங்களுக்கு முன்னர் உள்ள புதைகுழி ஒன்றைப் பார்வையிடுவதற்கு வோல்கர் டர்க் இலங்கைக்கு வருகை தந்தமையின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் வட பகுதியில் பல சிங்களவர்களும் முஸ்லிம்களும் வசித்து வந்த போதிலும் இன்று அவர்கள் அங்கு இல்லாமல் போயுள்ளனர். அத்துடன், ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ போன்ற அமைப்புகளின் உறுப்பினர்கள் பலரையும் விடுதலை புலிகள் கொலை செய்தனர்.

விடுதலைப் புலிகளுடைய நூற்றுக்கணக்கான வதை முகாம்களும் செயல்பட்டுள்ளன. அங்கு பலர் அழைத்துச் செல்லப்படுவதை மக்கள் அவதானித்தமை தொடர்பிலும் யுத்த காலத்தில் தகவல்கள் கிடைத்திருந்தன.

துணுக்காய், மாங்குளம் பகுதிகளில் விடுதலை புலிகள் நடத்தி வந்த வதை முகாம்களும் கண்டறியப்பட்டிருந்தன. அங்கும், பலர் வதைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை பலரும் அறிந்த விடயமாகும்.

இந்தநிலையில், புலம்பெயர் தமிழர்களின் அழுத்தத்தால் இன்று யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தினரை போர் குற்றவாளிக ளாகக் காட்டுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போதைய அரசாங்கத்தின் செயல்பாடுகள் அதற்கு வழியை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளன - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## வழக்கால்...

செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன்போது, அவர் மேலும் கூறியவை வருமாறு,

வடக்கு, கிழக்கில் காணி பிரச்னைகள் நிறையவே இருக்கின்றன. ஒருபுறத்தில் மக்களின் காணிக்கான உரித்து இழக்கப்பட்டிருக்கிறது. மறுபுறம் காணிகளை பயன்படுத்த முடியாத நிலைமையில் உள்ளனர். இவ்வாறான நிலையில், இராணுவம் உள்ளிட்ட படைத் தரப்புகளாலும் வனவளத் திணைக்களத்தாலும் கையகப்படுத்தப்பட்ட காணிகளும் உள்ளன. இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் கலந்துரையாடி அவற்றை மீளவும் மக்களிடமே வழங்குவோம்.

வவுனியா மாவட்டத்தில் வனவள திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு, அவற்றில் பெருமளவை விடுவிக்க இணக்கம் எட்டப்பட்டுள்ளது. இதன்படி, வவுனியாவில் 24 ஆயிரம் ஏக்கர் காணிகள் பொது மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இதுவரை காலமும் எம்மிடம் விவசாயம், கால்நடை, காணி விடயங் களை உள்ளடக்கி ஒன்றிணைந்த வேலைத் திட்டம் இருக்கவில்லை. தற்போது அது உருவாக்கப்பட்டிருக் கிறது. ஆகவே இனி வரும் காலங்களில் ஒன்றிணைந்த வேலைத்திட்டமாக இதனை கொண்டு செல்வதற்கான வாய்ப்பு காணப்படுகிறது. நாங்கள் இவ் வாறான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது வறுமையை இல்லாது ஒழிப்பதற்காகவே.

வடக்கு மாகாணத்தில் காணி உரித்து தொடர்பில் நாம் ஒரு விசேட வர்த்தமானியை வெளியிட்டிருந்தோம். ஆனால், தமிழ் அரசு கட்சியின் சுமந்திரனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த வர்த்தமானி தற்போது கைவிடப்பட்டிருக்கிறது. எனினும், நாம் அரச உத்தியோகத்தர்கள் ஊடாக பொதுமக்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி காணி உரித்து தொடர்பான பிரச்னைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் - என்றார். (ஐ)

## 4ஆம் கட்ட...

அமெரிக்க டொலர் நீடிக்கப்பட்ட கடன் வசதி கிடைக்கவுள்ளது.

முன்னதாக, நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் இலங்கைக்கு முதல் மூன்று கட்டங்களின் மூலமாக 134 கோடி டொலர் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பேருந்து...

முன்னதாக, பேருந்து கட்டணங்களை 2.5 சதவீதத்தால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும், நேற்று முதல் எரிபொருட்களின் விலை உயர்த்தப்பட்டது. இதனால், பேருந்து கட்டணங்களை 0.55 சதவீதம் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அரசாங்கம்...

அதேவிலையில் எரிபொருளை மக்களுக்கு பெற்றுத் தருவோம் என அறிவித்தவர்கள். ஆட்சிக்கு வந்த பிறகு எரிபொருள் விலையை அதிகரித்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

நேற்றைய தினம் அவர் வெளியிட்ட விசேட உரையிலேயே இதனைக் கூறினார்.


மேலும், வாக்குறுதியளித்தபடி எரிபொருள் விலையில் சலுகை எங்கே? அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் தரகு நிறுத்தப்பட்டுள்ளதா? எரிபொருள்கள் மீதான வரிச்சுமைகள் நீக்கப்பட்டுள்ளனவா ? என்பன குறித்து நாம் இந்த அரசாங்கத்திடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. துறைமுகத்தில் இறக்கப்படும் அதே விலையில் நுகர்வோருக்கு தற்போது எரிபொருள் வழங்கப்படுகிறதா என்பது குறித்தும் நாம் இந்த அரசாங்கத்திடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டியுள்ளது.

இந்த அரசாங்கம் இன்று மக்களை ஏமாற்ற பொய் சொல்லி தவறாக வழி நடத்தி வருகிறது. சிரேஷ்ட பிரஜைகளினது சேமிப்புகளுக்கு விசேட திட்டமொன்றை முன்னெடுப்போம் என பிரஸ்தாபித்தனர். ஆனால், நடந்தது ஒன்றுமில்லை. சிரேஷ்ட பிரஜைகளுக்கான சேமிப்பு வட்டி வீதம் 15 வீதமாக அமையும் விதத்தில் சரிசெய்து தரப்படும் என தெரிவித்தனர். முன்னர் 15 இலட்சம் ரூபாய் மற்றும் 10 இலட்சம் ரூபாய் வைப்புத்தொகைகளுக்கு 15 சதவீத வட்டி வழங்கப்பட்டது. இதனை தற்போது இல்லாது செய்துள்ளனர். புதிய சேமிப்பு கணக்குகள், சிரேஷ்ட பிரஜைகளுக்கு கூடிய சலுகைகளை வழங்குவதாகவும் விளம்பரப்படுத்தப்பட்டன. சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புகளுக்குப் பெற்றுத் தருவோம் என வாக்குறுதியளித்த 15 சதவீத வட்டியை எப்போது வழங்குவீர்கள் - என்று கேட்டார்.

அத்துடன், "நாட்டில் கொலை சம்பவங்களும் அவ்வாறு காணப்படுகின்றன. கொலை கலாசாரம் தொடர்ந்து வருகிறது. அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள், குண்டர்கள் மற்றும் பாதாள உலகக் கும்பல்களால் துப்பாக் கிச் சூடுகளும் கொலைகளும் நடத்தப் பட்டு வருகின்றன. இதனால், நாடு முழுவதும் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. சட்டம் ஒழுங்கை நிலை நாட்டத் தேவையான எந்த வேலைத் திட்டமும் இந்த அரசாங்கத்திடம் இல்லையா?

அரசாங்கத்தால் பொதுப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது போயுள்ளன. ஆகவே தேசியப் பாதுகாப்புக்கு இது பிரச்சினையாக அமைந்து காணப்படவில்லை என அரசாங்கம் தொடர்ச்சியாக தெரிவித்து வருகிறது. பொதுமக்களின் பாதுகாப்பு தேசிய பாதுகாப்பு என்பதால், பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் விடயத்தில் அரசாங்கத்துக்கு பொறுப்பு காணப்படுகிறது. வாக்குறுதிகளை மீறி இந்த அரசாங்கம் தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றி வருகிறது. தற்போது இந்த அரசாங்கத்துக்கு ஏமாற்றே மிஞ்சிப்போயுள்ளது - என்றார். (ஐ)

# மின்விளக்கை பழுது பார்த்தவர் மின்சாரத்தால் தாக்குண்டார்!



யாழ்ப்பாணம், ஜூலை 02

வீதி மின்விளக்கை பழுது பார்த்துக் கொண்டிருந்த ஊழியர் ஒருவர் மின்சாரம் தாக்கியதில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார். அவர், யாழ். போதனா மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குள் கொக்குவில் சந்தைக்கு அண்மையாக குறித்த ஊழியர் மின் விளக்குகளை பழுது பார்த்துக் கொண்டிருந்தார். அப்போதே அவர் மின்சாரத்தால் தாக்குண்டார்.

அவரை மீட்ட சக ஊழியர்கள் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். (ஐ-03)

## அரியாலை...

பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே, அந்த 15 நாட்களுக்கு பின்னர், இந்த விடயத்தில் இறுதி முடிவுக்கு வரமுடியும்.

"எவ்வாறாயினும், குறித்த இடம் யுத்தம் நிலவிய பிரதேசமாகும். அங்கு, சகல பக்கங்களிலிருந்தும் துப்பாக்கி பிரயோகங்கள் நடத்தப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்கள் யாருடைய துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள்? என்பது மட்டுமே தற்போது தெரியாமல் உள்ளது. எனவே, உயிரிழந்த மக்களின் எலும்புக்கூடுகளை தேடி - கடந்த காலத்தைத் தோண்டும் நடவடிக்கை தற்போது தேவையற்ற விடயமாகும்.

"மாறாக, எதிர்காலத்தில் அவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்கு மக்களின் இதயங்களை குணப்படுத்த வேண்டும். இருப்பினும், இதயங்களை குணப்படுத்தும் நடவடிக்கைகளுக்குப் பதிலாக, மீண்டும் வெறுப்பை ஏற்படுத்தும் செயல்பாடுகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

இதனூடாக இலங்கைக்கு நன்மை கிடைக்கப் போவதில்லை. சர்வதேச சக்திகளுக்கும் பயங்கரவாத குழுக்களுக்கும் இலங்கையின் இனங்களுக்கு இடையே வெறுப்பை ஏற்படுத்த வேண்டிய தேவையே உள்ளது. அவர்களின் தனிப்பட்ட அரசியலுக்காகவே இவ்வாறான செயல்பாடுகள் இடம்பெறுகின்றன", என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

## ஓமந்தையில்...

என்று கூறப்படுகிறது. எனினும், இந்தக் காணி சுமார் 35 வருடங்களுக்கும் மேலாக ஒருவரின் பராமரிப்பில் இருந்தது என்றும் ஆனால், அந்தக் காணிக்கான ஆவணங்கள் எவையும் அவரிடம் இல்லை எனவும் கூறப்படுகிறது.

காணியின் பராமரிப்பாளர் போர் காலத்தில் இடம்பெயர்ந்திருந்தார். பின்னர், அங்கு குடியேற முயன்ற நிலையில் பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர் என்றும் கூறப்படுகிறது. இதனால், தற்போது அந்தக் காணி பராமரிப்பின்றி உள்ளது.

இதனிடையே, காணிக்கு உரிமை கோரும் நபர் அதற்கான ஆவணங்களை வேண்டி மாவட்ட அரச அதிபரிடமும் ஓமந்தை பிரதேச செயலரிடமும் கோரிக்கையை முன்வைத்திருந்தார். இந்த நிலையிலேயே அந்தக் காணியை பொலிஸார் நேற்று முன்தினம் துப்புரவு செய்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

துப்புரவு செய்யப்படும் காணியில் விகாரை அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். அத்துடன், இது விடயத்தில் உரியவர்கள் தலையிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கிணறருகே...

மீட்கப்பட்டார்.

உயிரிழந்தவர், கடந்த ஞாயிற்றுக் கிழமை கசிப் அருந்திவிட்டு வீட்டுக்கு சென்றுள்ளார். பின்னர், மீண்டும் கசிப்பு குடிக்கச் சென்றுள்ளார்.

அவர் மீண்டும் வந்தபோது வீடு பூட்டியிருந்ததால் வீட்டின் முன்னாலிருந்த கிணற்றுக்கு அருகில் படுத்து உறங்கியுள்ளார்.

மறுநாள் குடும்பத்தவர்கள் அவரை காணவில்லை என்று தேடிய நிலையில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். நிறைவெறியில் அவர் தவறுதலாக கிணற்றில் விழுந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

## வவுனியாவில்...

கைதானவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் - மானிப்பாயிலிருந்து காரில் வவுனியாவுக்கு வந்துள்ளனர். வவுனியா புதிய பேருந்து நிலையம் முன்பாக நின்ற இளைஞர் (18 வயது) ஒருவரை கடத்திய அவர்கள், குடியிருப்பு குளக்கட்டு பகுதியில் வைத்து இளைஞரை தாக்கியுள்ளனர்.

பின்னர், இளைஞரின் வங்கி அட்டையை பறித்தவர்கள் 50 ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்துவிட்டு, அவரை மீண்டும் வவுனியா புதிய பேருந்து நிலையம் முன்பாக இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞர் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்தார். இதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்து 19, 21 வய தான மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். மூவரையும் விசார ணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(ஐ)

## பொம்மையும்...

இதன்போது, கடந்த ஞாயிற்றுக் கிழமை அடையாளம் காணப்பட்ட புத்தகப் பை என்று நம்பப்படும் நீல நிற பை மீட்கப்பட்டது. இதன் கீழ் பொம்மை ஒன்றும் Bata என்று பொறியிடப்பட்ட சிறுவருக்கான காலணி ஒன்றும் மீட்கப்பட்டன.

மேலும், தொடர்ந்த அகழ்வில் சில மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அவை சிக்கலான நிலையில் காணப்படுவதால் அவற்றின் எண்ணிக்கையை நிபுணர்களால் கணிப்பிட முடியவில்லை. மீட்கப்பட்ட பின்னரே சரியான எண்ணிக்கையை கூறமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், கடந்த ஞாயிற்றுக் கிழமை வரை செம்மணி அகழ்வில் 33 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய தினமும் அகழ்வுப் பணி தொடரவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# செப்ரெம்பர் ஜெனிவா கூட்டத்தில் இலங்கை குறித்து புதிய தீர்மானம்

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் மீளாய்வு அறிக்கையும் முன்வைக்கப்படும்

கொழும்பு, ஜூலை 02

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 03 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாக வுள்ளது.**

ஒக்ரோபர் 03 ஆம் திகதிவரை இம்மாநாட்டில் இலங்கை தொடர்பில் புதிய தீர்மானமொன்று வரவுள்ளது. அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் மீளாய்வு அறிக்கையும் முன்வைக்கப்படவுள்ளது.

எனவே, இலங்கை அரசின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான உயர்மட்டக்கு ழுவொன்று பங்கேற்கவுள்ளது என தெரியவருகின்றது.

அதேபோல ஜெனிவா தொடருக்கு முன்னதாக பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவுள்ளது எனவும், நிகழ்நிலை சட்டம்கூட மீளாய்வுக் குட்படுத்தப்படவுள்ளதெனவும் அறியமுடிகின்றது. (அ)

செம்மணிப் புதைகுழி விவகாரம்

# செயற்கை நுண்ணறிவால் விசாரணைகள் சீர்குலைவு

கொழும்பு, ஜூலை 02

செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்படும் என்புச் சிதிலங்கள் மற்றும் சான்றுப் பொருள்களை அடிப்படையாக வைத்து உருவாக்கப்படும் செயற்கை நுண்ணறிவுப் படங்கள், குற்றவியல் விசாரணைகளை சீர்குலைக்கின்றன என எச்சரிக்கப்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழியில் சமீப நாள்களாக பல்வேறு மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. கடந்த இரு நாள்களாக மனிதச் சிதிலங்களுக்கு மேலதிகமாக புத்தகப்பை, வளையல்கள். பாதணிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படை யாக வைத்து செயற்கை நுண் ணறிவின் உதவுடன் போலியானதும் கற்பனையான துமான படங்களை இணையப் பயநர்கள் உருவாக்குவ துடன் அவற்றை சமூகவலைத் தளங்களில் பரவவும் விட்டுள்ளனர்.

இந்தச் செயற்பாடுகள் குற்றவியல் விசாரணைகளை சீர்குலைக்கின்றன. அத்துடன், விசாரணைகளின் நோக்கங்களில் அல்லது செல்நெறிகளில் வலிந்து தலையீட்டையும், திசைதிருப்பலையும் ஏற்படுத்தும் முயற்சியாகப் பார்க்கப்படுகின்றது. (அ)

# பாடசாலை வான் கட்டணம் அதிகாரிக்கப்படமாட்டாது!

கொழும்பு, ஜூலை 02

ஒரு லீற்றர் டீசலின் விலை 15 ரூபாவால் அதிகரித்தாலும், பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் கட்டணம் அதிகரிக்கப்படாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பாடசாலை போக்குவரத்துச் சங்கத் தலைவர் மல்சிறி டி சில்வா தெரிவித்துள்ளார்.தற்போதைய சூழ்நிலையில் வான் கட்டணம் அதிகரித்தால், மாணவர்களின் எண்ணிக்கையும் குறையும்.

மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணங்களை செலுத்த முடியாத பெற்றோருக்கு மேலும் சுமையை ஏற்படுத்த முடியாதென்றும் அவர் மேலும் கூறினார். (அ)

# நெல் கொள்வனவு செய்வதற்கு விவசாயிகளுக்கு புதிய கடன்!

கொழும்பு, ஜூலை 02

நெல் கொள்வனவு செய்வதற்கு சலுகை வட்டி விகிதத்தின் கீழ் விவசாயிகளுக்காக புதிய கடன் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சிறு மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலைகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களினால் இந்த திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த புதிய கடன் திட்டத்தை பெற விரும்பும் விவசாயிகள் அரச நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வணிகப் பெயர் பதிவுச் சான்றிதழ் மற்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் வழங்கப்பட்ட ஆவணங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

இந்த கடன் திட்டத்தின் கீழ், ஆண்டுக்கு 7 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் 50 மில்லியன் ரூபா வரை கடன்களைப் பெற முடியும்.ஆனால் அந்த கடன்களை 180 நாட்களுக்குள் உரிய வங்கியிடம் மீள செலுத்த வேண்டும். (அ)

# பஸ் கட்டணம் அதிகரிக்காது!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, ஜூலை 02

எரிபொருள் விலை உயர்வு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று திட்டமிடப்பட்ட பேருந்து கட்டண திருத்தம் பரிசீலிக்கப்படும் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியளித்தார்.

ஊடகங்களுக்கு பேட்டியளித்த அமைச்சர், நேற்று இரவு அறிவிக்கப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, திட்டமிடப்பட்ட பஸ் கட்டண திருத்தம் குறித்து பரிசீலிக்கப்படும் என்று கூறினார்.

புதிய கட்டணங்கள் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் விலை திருத்த சூத்திரத்தைப் பயன்படுத்தி கணக்கிடப்பட்டன.

எரிபொருள் விலை சூத்திரத்தைப் பயன்படுத்திய பிறகும், இந்த நேரத்தில் பஸ் கட்டணங்களை திருத்த வேண்டிய அவசியமில்லை என்று பிமல் ரத்நாயக்க உறுதிப்படுத்தினார்.

முன்மொழியப்பட்ட கட்டண சரி செய்தல் நேற்று முன் தினம் மாலை மதிப்பாய்வு செய்யப்பட்டதாகவும், ஆனால் கணக்கீட்டு முடிவுகள் தற்போதைய சூத்திரத்தின் கீழ் அதிகரிப்பு தேவையற்றது என்பதைக் காட்டியதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவது அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 02

இந்த ஆண்டு மே மாதத்தில் வெளிநாட்டில் உள்ள இலங்கை ஊழியர்களிடம் இருந்து பணம் அனுப்புவது 17.9 வீத வளர்ச்சியைக் காட்டுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, 2025 ஜனவரி முதல் மே வரை பெறப்பட்ட மொத்த பணப்பரிமாற்றங்கள் 3.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டு மே மாதத்தில் சுற்றுலா வருவாய் 164 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும்,

இதுவரையான காலப்பகுதியில் மொத்த சுற்றுலா வருவாய் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுவதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# கட்டுப்பாட்டையிழந்த வாகனம் நெல்மூடைகளுடன் கவிழ்ந்தது!



வவுனியா, ஜூலை 02

வவுனியா பம்மைமடு பகுதியில் நெல்மூடைகளை ஏற்றிச்சென்ற வாகனமொன்று கட்டுப்பாட்டையிழந்து வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

மன்னார் பிரதான வீதியூடாக வவுனியா நகர் நோக்கி பயணித்த வாகனமே நேற்றுக் காலை விபத்துக்குள்ளாகியது.

நெல் மூடைகளை ஏற்றிச்சென்ற வாகனம் பம்பைமடு இராணுவ முகாமை அண்மித்த பகுதியில் வீதியின் மறுபக்கம் திரும்ப முற்பட்டவேளை சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் வாகனத்திலிருந்த நெல் மூடைகள் வீதியில் சிதறியதுடன் வாகனமும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இந்த விபத்துச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பூவரசங்குளம் போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# சட்டவிரோதமாக மீன்பிடித்த ஏழு தமிழக மீனவர்கள் கைது!

மன்னார், ஜூலை 02

தலைமன்னார் கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக இந்தியாவின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஏழு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய ஊடக அறிக்கைகளின்படி,நேற்று முன் தினம் இரவு 11:00 மணியளவில், சர்வதேச கடல் எல்லைக் கோட்டைக் கடந்த பின்னர், அந்தக் குழு கைது செய்யப்பட்டு, அவர்களின் படகும் கைப்பற்றப்பட்டது.

சட்டவிரோத மீன்பிடிக்காக இந்திய மீனவர்கள் இந்த வாரத்தில் கைது செய்யப்படும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த எட்டு இந்திய மீனவர்களை கடற்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை செய்தனர்.

இதன்போது, அவர்களின் இழுவைப் படகுகளும் கைப்பற்றப்பட்டன.

இதற்கிடையில், கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது மீன்பிடி படகுகளையும் பாதுகாப்பாக திருப்பி அனுப்புவதை உறுதி செய்யுமாறும், மீன்பிடி தொடர்பான பிரச்னைகளை கையாள்வதில் இலங்கை அதிகாரிகளுடன் இராஜதந்திர ரீதியாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தொடங்குமாறும் கோரி, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். (அ)

# இங்கிலாந்து செல்ல மோசடியில் ஈடுபட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 02

இங்கிலாந்தில் அடைக்கலம் கோருவதற்கான புதிய மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும், முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவரை, கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு, குடியகல்வுத் துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மும்பைக்குச் செல்லவிருந்த 29 வயதான குறித்த முல்லைத்தீவு குடியிருப்பாளரிடம் இருந்து பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் போலியான கடவுச்சீட்டுக்களும் கைப்பற்றப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே மும்பாய்க்கு பயணித்துள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இங்கிலாந்தில் குடியுரிமை பெற்ற ஒருவரும், குறித்த முல்லைத்தீவு குடியிருப்பாளரும், மும்பாயில் சந்தித்து, போர்டிங் பாஸ் என்ற விமானத்தில் ஏறுவதற்கான ஆவணத்தை மாற்றிக்கொள்வதற்கான மோசடியை தாம் கண்டுபிடித்துள்ளதாக குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்னர் அவர்கள் சிங்கப்பூருக்கும் இங்கிலாந்துக்கும் பயணிக்க திட்டமிட்டிருந்ததாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினால் 02.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.